காலம் என்னும் மாபெரும் நதி தன் ஓட்டத்தில் எத்தனையோ கலைப் படைப்புகளை அடித்துச் சென்றிருந்தாலும், ஒரு சில படைப்புகள் மட்டுமே அந்த நதியின் ஆழத்தில் அழியாத சுவடுகளாகப் படிந்துவிடுகின்றன. அப்படி 1976-ம் ஆண்டு, மே 14-ம் தேதி தமிழ்நாட்டுத் திரையரங்குகளில் வீசிய அந்தப் புதிய புயலுக்கு இன்று வயது ஐம்பது.

1975-ல் கொண்டுவரப்பட்ட அவசரநிலைப் பிரகடனம் (Emergency) தேசத்தின் குரல்வளையை முழுமையாக நெரித்திருந்த தருணம் அது. பத்திரிகைகளில் தணிக்கை, பொதுவெளியில் பேசவே தயக்கம், அத்தனைக்கும் மேலாக எங்கும் பீதி. இந்த நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு, கிராமத்துக் கொட்டகைகளிலும், வீடுகளின் கிராமபோன் தட்டுகளிலும் ஒரு புதிய சிம்பொனி ஒலிக்கத் தொடங்கியது.

தென்னிந்தியத் திரை இசை பெருமளவில் ஸ்டுடியோக்களின் செயற்கையான சூழலுக்குளும், மேலைநாட்டு வாத்தியங்களின் சம்பிரதாயமான பயன்பாட்டிலும், தூய கர்னாடக சங்கீத ராகங்களின் இறுக்கமான பிடியிலும் கட்டுண்டு கிடந்த அந்த அமைப்பை உடைத்து, தமிழ் நிலத்தின் தூசியையும், வியர்வையையும், உழைக்கும் மக்களின் ஆன்மாவையும் திரையிசைக்குள் கொண்டுவந்த ஒரு மாபெரும் மாயாஜாலம் அன்று அரங்கேறியது. இன்று நாம், அந்த மாயாஜாலம் நிகழ்ந்து சரியாக அரை நூற்றாண்டுக்காலத்தைக் கடந்து நிற்கிறோம்.

ஆம், 32 வயது நிரம்பிய ஓர் இளைஞன், 'பண்ணைப்புரம்' என்ற சிறிய கிராமத்திலிருந்து தன் கைகளில் ஒரு ஹார்மோனியத்துடனும், நெஞ்சுக்குள் பலநூறு நாட்டுப்புற மெட்டுகளுடனும் மெட்ராஸ் நகருக்குள் நுழைந்து உருவாக்கிய 'அன்னக்கிளி' திரைப்படத்தின் பொன்விழா ஆண்டை நாம் இன்று கொண்டாடுகிறோம். அவரது வருகை, தமிழ் சினிமாவின் இசையை மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்தின் கலை ரசனையையும் வேரோடு மாற்றப்போகிறது என்பதை அன்று யாரும் உணர்ந்திருக்கவில்லை.

திரையிசையின் முந்தையச் சூழல்!

'அன்னக்கிளி' வெளியாவதற்கு முன்பு, தமிழ் திரையிசைக் களம், எம்.எஸ்.விஸ்வநாதன், கே.வி. மகாதேவன் என்ற இரண்டு மாபெரும் சாம்ராஜ்ஜியங்களாகப் பிரிந்து கிடந்தது. எம்.எஸ்.விஸ்வநாதன் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு புதிய மெட்டமைக்கும் அபாரமான உள்ளுணர்வுகொண்டவர். கவியரசு கண்ணதாசனின் தத்துவ வரிகளுக்குக் குரலின் வழியே உயிர் கொடுப்பது அவரது பாணி. கே.வி.மகாதேவனோ, கர்னாடக இசையின் கம்பீரத்தை 'திருவிளையாடல்', 'சங்கராபரணம்' எனத் திரையில் காவியமாக்கிக்கொண்டிருந்தார்.

இரண்டு பாணிகளிலுமே குரலுக்கும், வரிகளுக்கும் இருந்த முக்கியத்துவம் வாத்தியங்களுக்கு இல்லை. பாடல்கள், மூன்று சரணங்கள் என்ற செவ்வகக் கட்டத்துக்குள் அடைபட்டிருந்தன. தொழில்நுட்ப வரம்புகளால், இடையிசைகள் (Interludes) பெரும்பாலும் முதல் சரணத்துக்கும், இரண்டாவது சரணத்துக்கும் நடுவே ஒலிப்பதையே, அடுத்தடுத்த சரணங்களுக்கும் 'காப்பி-பேஸ்ட்' செய்துகொண்டிருந்தார்கள். வாத்தியக் கோர்ப்புகளும், பின்னணி இசையும் பெரும்பாலும் உதவியாளர்களின் பொறுப்பில்தான் இருந்தன.

இதே காலகட்டத்தில், திராவிட இயக்க சினிமாக்களின் வசன ஆதிக்கம் ஒருவித தேக்கநிலையை அடைந்திருந்தது. மெட்ராஸின் இளைஞர்கள் பாலிவுட் இசையை நோக்கித் திரும்பியிருந்தனர். 1969-ல் வெளியான ராஜேஷ் கன்னாவின் 'ஆராதனா' சென்னைத் திரையரங்குகளில் ஒரு வருடத்துக்கும் மேலாக ஓடிக்கொண்டிருந்தது. ஆர்.டி.பர்மனின் கிதார் மீட்டல்களும், கிஷோர் குமாரின் குரலும் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் ஒலிக்கத் தொடங்கிய சூழல். தமிழ் மண்ணின் வேர்களைத் தேடும் ஒரு புதிய இசைக்கான தாகம் உருவாகியிருந்தது.

பண்ணைப்புரத்திலிருந்து மெட்ராஸ் வரை

1943, ஜூன் 3. மதராஸ் மாகாணம், தேனி



அரியணை ஏறிய மண்வாசம்!

இளையராஜா 50

படம்: 'ஸ்டில்ஸ்' ரவி

மாவட்டம் 'பண்ணைப்புரம்' என்ற சிற்றூரில் ராமசாமி - சின்னத்தாயம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர் ஞானதேசிகன். சுருக்கமாக 'ராசையா' என்றழைத்தது ஊர். பள்ளிக்கூடப் பதிவேட்டில் 'டேனியல் ராசப்பா.' கலைஞர் மீதான ஆழமான மதிப்பின் காரணமாகத் தன் பிறந்தநாளை ஜூன் 2-ல் கொண்டாடிவருகிறார்.

பசி, அவமானம். இரண்டுக்கும் நடுவே அண்ணன் பாவலர் வரதராஜனுடனும், தம்பி கங்கை அமரனுடனும் இணைந்து கம்யூனிஸ்ட் கட்சியின் மேடைகளில் கம்யூனிசப் பாடல்களைப் பாடியபடி நாட்டார் இசையின் ஆழத்தை உள்வாங்கினார். வறுமை துரத்த, வீட்டிலிருந்த ஒரே ரேடியோவை விற்று நானூறு ரூபாயைத் திரட்டிக்கொண்டு, சகோதரர் பாஸ்கரனோடும், பெரிய கனவுகளோடும் 1968-ல் மெட்ராஸ் மாநகரத்துக்கு ரயிலேறினார்.

மெட்ராஸில், மாஸ்டர் தன்ராஜ், டி.வி. கோபாலகிருஷ்ணனிடம் இசையின் இலக்கணங்களைக் கற்றார். 'ராசையா' என்ற பெயரை 'ராஜா' என்று சுருக்கியது மாஸ்டர் தன்ராஜ்தான். அவரின் அறையில் ஒலிக்கும் மொஸார்ட், பீத்தோவன், பாக் ஆகியோரின் கிளாசிக் இசை, மேற்கத்திய இசையின் 'ஹார்மனி', 'கவுன்ட்டர்பாயின்ட்' நுட்பங்களை அவருக்குக் கற்றுக்கொடுத்தது. லண்டன் டிரினிட்டி கல்லூரியில் கிளாசிக்கல் கிடாரில் தங்கப்பதக்கம். சலில் சௌத்ரியிடம் கிடார் கலைஞராகவும், ஜி.கே.வெங்கடேஷிடம் உதவியாளராக 200 படங்களுக்கும் மேல் பணியாற்றிய பட்டறை அனுபவம் ராஜாவின் ஆர்கெஸ்ட்ரேஷன் திறனைச் செதுக்கியது.

அவர் திரையில் ஒலிக்கும் முன்பே, எம்.எல்.ஏ விடுதியில் தங்கியிருந்த நாகூர் இ.எம். ஹனீபாவைச் சந்தித்து தாளங்களை வாசித்துக் காட்டினார். பாகேஸ்ரீ, தர்பாரி கானடா ராகங்களை கிடார், புல்லாங்குழல், மிருதங்கத்தோடு அவர் இணைத்தவிதம் ஹனீபாவை மலைக்கவைத்தது. ஹனீபாவின் 'தென்றல் காற்றே கொஞ்சம் நில்லு', 'நபி வழி நடந்தால்' ஆகிய பாடல்களின் பின்னணி இசையில் ராஜாவின் கைவண்ணத்தை நீங்கள்

உணர முடியும். அப்போது அவர் இசையமைத்த 'ஆளும் இறைவன்' என்ற இஸ்லாமிய பக்திப் பாடல், இன்றளவும் பலரது நினைவுகளில் ரீங்காரமிடுகிறது. தான் திரும்பி வந்ததும் வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதாக ஹனீபா உறுதியளித்திருந்தார். ஆனால், அவர் திரும்பி வருவதற்குள், நிகழ்ந்தது வேறு.

பஞ்சு அருணாசலம்: ஒளியைக் கண்டறிந்த தீர்க்கதரிசி!

'திறமை' எனும் பெருங்கதவு எப்போதுமே ஒரு திறவுகோலுக்காகக் காத்திருக்கும். ராஜாவுக்கான திறவுகோல், பஞ்சு அருணாசலம். ஒரே பாணியில் ஒலிக்கும் இசைக்கு மாற்றாக, ஒரு புதிய வகை இசையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவருக்கு, ஆர்.செல்வராஜ் என்ற கதாசிரியர் மூலம் அந்தப் பண்ணைப்புரத்து இளைஞன் அறிமுகமானார்.

பஞ்சு அருணாசலத்தின் வீட்டு மேஜையில் ஒரு பழைய ஹார்மோனியத்தில், ராஜா வாசித்துக் காட்டிய 'அன்னக்கிளி உன்னைத் தேடுதே', 'மச்சானைப் பாத்தீங்களா...' போன்ற கிராமிய மெட்டுகள் பஞ்சு அருணாசலத்தைத் திகைக்கவைத்தன. இந்தப் பாடல்களுக்காகவே ஒரு படத்தை எடுக்க முடிவெடுத்தார். ஆர். செல்வராஜ் எழுதிய 'மருத்துவச்சி' என்ற கதையை, 'அன்னக்கிளி'யாக மாற்றினார் பஞ்சு அருணாசலம். எஸ்.பி.டி பிலிம்ஸ் தயாரிப்பில், சிவகுமார்-சுஜாதா நடிப்பில், தேவராஜ்-மோகன் இயக்கத்தில் மிகக் குறைந்த பொருட்செலவான சுமார் 4 லட்சம் ரூபாய் பட்ஜெட்டில் படம் தயாராக முடிவானது.

"எம்.எஸ்.வி., கே.வி.எம் கோலோச்சும் காலத்தில் ஒரு புதுமுக இசையமைப்பாளரா... வேண்டாம். பெரிய ரிஸ்க்" எனப் பலரும் தடுத்தார்கள். ஆனால், பஞ்சு அருணாசலம் உறுதியாக இருந்தார். அப்போது திரையுலகில் பழம்பெரும் பின்னணிப் பாடகரும், இசையமைப்பாளருமான ஏ.எம்.ராஜா உச்சத்தில் இருந்ததால், 'ராசையா' என்ற பெயருக்கு முன்னால் 'இளைய' என்ற அடைமொழியைச் சேர்த்து 'இளையராஜா' எனப் பெயர் சூட்டினார் பஞ்சு.

காட்சியமைப்பின் யதார்த்தம்

ஏ.வி.எம்., வாஹினி என ஸ்டூடியோக்களுக்குள் மரங்களை நட்டு செயற்கையாகக் கிராமம் உருவாக்கிக்கொண்டிருந்த காலத்தில், 'அன்னக்கிளி', கேமராவைத் தூக்கிக்கொண்டு உண்மையான நிலத்தைத் தேடி வெளியே வந்தது. நடிகர் சிவகுமார் பரிந்துரைத்த, ஈரோடு மாவட்டம், பவானிசாகரைத் தாண்டி நீலகிரி எல்லையில் இருந்த தெங்குமரஹடா என்ற ரகசிய சொர்க்கம் படப்பிடிப்புத் தளமானது. பத்தே வீடுகள் கொண்ட அந்த அமைதியான மோயார் ஆற்றங்கரை கிராமம்தான் திரையில் 'சோலையூர்' என மாறியது. பாலங்கள் இல்லாத மாயார் நதியைப் பரிசல்களில் கடந்து சென்று படப்பிடிப்பு நடத்தினார்கள். தமிழ் சினிமாவின் முதல் பெண்ணிய அலை 'அன்னக்கிளி'யில் இருந்துதான் தொடங்குகிறது என்று வரலாற்று ஆய்வாளர்கள் சொல்வதுண்டு. பாரதிராஜா, மகேந்திரன், பாலுமகேந்திரா காலத்து யதார்த்த சினிமாவின் பிள்ளையார்சுழி இது.

'அன்னக்கிளி உன்னைத் தேடுதே...'

'அன்னக்கிளி'யின் பாடல் ரெக்கார்டிங் பணிகள் ஆரம்பித்தன. ஆரம்பத்தில் இந்தப்



பாடலின் சோக வடிவத்தை எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாட வேண்டும் என்றுதான் இளையராஜா விரும்பினார். ஆனால், ரெக்கார்டிங் அன்று எஸ்.பி.பி-க்கு உடல்நலக் குறைவு காரணமாக, டி.எம்.சௌந்தரராஜன் பாடுவதாகவும், பாடலின் மகிழ்ச்சியான வடிவத்தை எஸ்.ஜானகி பாடுவதாகவும் முடிவானது.

முதல் டேக் எடுக்கும்போதே மின்தடை. மொத்தக் குழுவும் அமைதி. எல்லோரும் இதை அபசகுனமாகப் பார்த்தனர். ஆனால், ராஜா மனம் தளரவில்லை. அடுத்தடுத்து என்ன செய்வது என யோசித்தார். இரண்டாவது டேக், பாடல் தொடங்கியது. ஆனால்

உதவியாளர் ரெக்கார்டிங் பட்டனை அழுத்த மறந்துவிட, "என்னதிது சகுனமே சரியில்லையே" என்று நினைத்தவர்களின் மத்தியில் இறுதியாக மூன்றாவது டேக்கில் பதிவானது சரித்திரம்.

சுத்த மத்திமத்தில் அமைந்த 'அன்னக்கிளி உன்னைத் தேடுதே...', ஜானகியின் தேன் குரலில் தொடங்கும் முன்பே வரும் அந்த ஹம்மிங், கிராமத்துச் சோலையின் காற்றில் மிதந்துவரும் தூய நாதம். இடையிசைகளில் புல்லாங்குழல், வயலின், கிடார் மூன்றும் ஒன்றோடொன்று பேசிக்கொள்ளும் அந்த 'கவுன்ட்டர்பாயின்ட்' நுட்பம், மேலைநாட்டு சிம்பொனிகளின் தரத்தை வரப்புக்குள் கொண்டுவந்து நிறுத்தியது. ஒரு வாத்தியம் கரையும்போதே தடையின்றி மற்றொரு வாத்தியம் தொடங்கும் மேதமை அது.

படம் வருவதற்கு முன்பே ஒரு கல்யாணக் கச்சேரியில் தன் வாத்தியக்குழுவுடன் ராஜா வாசித்து ஹிட்டான பாடல் 'மச்சானைப் பாத்தீங்களா.' எஸ்.ஜானகியின் குரலில் ஒலிக்கும் இந்தப் பாடல், பின்னாளில் 'டப்பாங்குத்து' என்ற இசை வடிவத்துக்கு ஒரு புதிய இலக்கணத்தை எழுதியது. வயற்காட்டில் நாற்று நடும் உழைப்பின் தாளத்தை, அதன் அசல் தன்மை குறையாமல் மேற்கத்திய வாத்தியங்களோடு கொடுத்தார். இரண்டு தனித்தனி மெட்டுகளை ஒரே நேரத்தில் வாசிக்கச் செய்து ஒற்றை மெட்டாக ஒலிக்கச் செய்த வித்தை அது. 'சொந்தமில்லை பந்தமில்லை...', பண்ணாரியின் இயற்கை எழிலுக்கு நடுவே, ஒரு பெண்ணின் தனிமைத் துயரைக் குறைந்த வாத்தியங்களோடு சுசீலாவின் மென்மையான குரல் வழியே மனதை அறுக்கச் செய்தது.

ஒரு கிராமத்துப் பெண்ணின் காதல் தவிப்பை, அதன் கிராமியத்தின் அசல் துள்ளலையும், மண்ணின் தாளக்கட்டையும் திரையில் பெருக்கெடுத்து ஓடச் செய்த பாடல் 'அடி ராக்காயி.' இசைக்குயில் எஸ்.ஜானகியின் காந்தக் குரலில் ஒலித்த இந்தப் பாடல், எளிய மக்களின் கொண்டாட்டத்தை எவ்விதச் செவ்வியல் சமரசமுமின்றி அதன் தூய நாட்டுப்புற வடிவில் பதிவுசெய்தது. காலம் கடந்தும் இந்தப் பாடல் தமிழர்களின் நாடிகளில் நிலைத்து நிற்பதற்குச் சான்றாக, பல தசாப்தங்கள் கழித்து 2009-ம் ஆண்டு வெளியான தனுஷின் 'படிக்காதவன்' திரைப்படத்திலும் இந்தப் பாடல், விவேக்கின் ஒரு குறிப்பிட்ட நகைச்சுவைக் காட்சியில் பயன்படுத்தப் பட்டதைக் கூறலாம்.

இலக்கணத்தை மாற்றிய பின்னணி இசை!

'அன்னக்கிளி'யின் வெற்றி அதன் பாடல்களால் உருவானது உண்மை. ஆயினும், தமிழ் சினிமாவின் இலக்கணத்தை அடியோடு மாற்றியது அதன் பின்னணி இசைதான். சொல்லப்படாத எண்ணங்களை இசையால் வெளிப்படுத்தும் கலையை ராஜா கைக்கொண்டிருந்தார். ஹாலிவுட்டில் நினோ ரோட்டா, பெர்னார்ட் ஹெர்மன், என்னியோ மோரிக்கோன் போன்றவர்கள் எப்படி இசையால் ஒரு காட்சியின் ஆன்மாவைக் கடத்தினார்களோ, அதை ராஜா இங்கே நிகழ்த்தத் தொடங்கினார். கிராமத்தின் அமைதிக்கு ஒற்றைப் புல்லாங்குழல், சோகத்துக்கு 'பிட்சிகாடோ' வயலின், காதலுக்கு கிளாசிக்கல் கிடார் என, எங்கு மௌனம் பேச வேண்டும், எங்கு இசை எழ வேண்டும் என முதல் படத்திலேயே அவருக்குத் தெரிந்திருந்தது.

முதல் இரண்டு நாள்கள் திரையரங்குகளில் பெரிய கூட்டம் இல்லை. புதுமுகம், விசித்திரமான கதை. ஆனால், மூன்றாம் நாள் மேஜிக் பரவத் தொடங்கியது. தமிழ்நாட்டுப் பார்வையாளர்களை ஒரு பேரலையைப்போல அது ஆட்கொண்டது. வாய்மொழிச் செய்தியாகப் பரவி, கோவை இருதயா தியேட்டரில் 205 நாள்கள் தொடர்ந்து ஓடி, ஒட்டுமொத்தமாக 25 வாரங்களைக் கடந்து வெள்ளி விழா கொண்டாடியது. சிறந்த படத்துக்கான ஃபிலிம்பேர், தமிழக அரசின் ஒரு லட்சம் ரூபாய் மானியம், 1978 சர்வதேசத் திரைப்பட விழாவில் (IFFI) இந்திய பனோரமா திரையிடல் என அங்கீகாரங்கள் குவிந்தன.

மாபெரும் கலாசார மீளுருவாக்கம்!

தமிழ்த் திரையில் இசையின் வரலாற்றை 'அன்னக்கிளிக்கு முன்', 'அன்னக்கிளிக்குப் பின்' என்று பிரித்துப் பார்க்க வேண்டும் எனும் அளவுக்கு, அந்தத் திரைப்படத்தின் இசை ஒரு கலாசார மீளுருவாக்கத்தின் தொடக்கப் புள்ளியாக விஸ்வரூபம் எடுத்தது. உயர்ந்த சபாக்களில் மட்டுமே வாசிக்கப்பட்டுவந்த வாத்தியங்களை, சாமானிய மக்களின் வயல்வெளி மெட்டுகளுக்குப் பயன்படுத்தத் தொடங்கியது இதிலிருந்துதான். அதேபோல, ஒடுக்கப்பட்ட மக்களின் வாத்தியங்களான பறை, தப்பு ஆகியவை ஏ.சி அறையின் மெட்ராஸ் ஸ்டூடியோக்களுக்குள் மாபெரும் ஆர்கெஸ்ட்ராக்களின் சிம்மாசனத்தில் அமர்ந்தன. தமிழ்த் திரையிசையில் அதுவரை

ஆதிக்கம் செலுத்திவந்த மேட்டுக்குடி மனநிலையை உடைத்து, புதிய வட்டாரவாதம் தமிழ் சினிமாவின் இசையுலகில் அறிமுகமானது. பாரதிராஜா, பாலுமகேந்திரா, மகேந்திரன் போன்ற இயக்குநர்களின் காட்சிப் படிமங்களுக்கு உயிர் கொடுத்தது இந்த இசைதான்.

டி.எம்.கிருஷ்ணா அவதானிப்பதுபோல, எம்.எஸ்.வி போன்றோர் கர்னாடக ராகங்களைத் திறமையாகக் கையாண்டிருந்தாலும், மிகச் சிக்கலான ஹார்மனிகளுடன் கர்னாடக ராகங்களை முரண்படாமல் இணையச் செய்த ராஜாவின் திறமையான அணுகுமுறை இந்தியச் சூழலுக்கு முற்றிலும் புதியது. 'சிந்து பைரவி', 'சலங்கை ஒலி', 'ருத்ரவீணை' போன்ற படங்கள்



மூலம் மிகக் கடினமான ராகங்களையும் சாமானியர்களை முணுமுணுக்கவைத்தார். கல்யாணி ராகத்தின் ஆரோகணத்தில் மட்டுமே அமைந்த 'கலைவாணியே' (சிந்துபைரவி) பாடல் என ராஜாவின் கணித நுட்பங்களுக்கு அளவில்லை.

நிற்காத நதியின் பயணம்!

'அன்னக்கிளி'யில் எடுத்த தாகம் அத்தோடு தணியவில்லை. தொழில்நுட்பத்தைக் கலையோடு இணைத்து, 1986 'விக்ரம்' மூலம் கணினியில் பாடலைப் பதிவுசெய்த முதல் இந்திய இசையமைப்பாளரானார். பேஸ் புல்லாங்குழல், சாக்ஸபோன், சந்தூர் போன்றவற்றை அறிமுகப்படுத்தி, நாகஸ்வரத்துக்கும் தவிலுக்கும் புதிய மரியாதை தேடித்தந்தார். 'பஞ்சமுகி' என்ற புதிய ராகம். 'ஹவ் டு நேம் இட்' (1986), 'நத்திங் பட் விண்ட்' (1988) ஆல்பங்கள், திருவாசக சிம்பொனி (2006) எனப் பரிணாமம் கண்டார். 2025, மார்ச்சில் லண்டனில் முழுமையான மேற்கத்திய கிளாசிக் சிம்பொனியை நேரலையாக இயற்றி வாசித்த முதல் இசையமைப்பாளர் என்ற வரலாற்றுச் சாதனை படைத்தார். ஐந்து தேசிய விருதுகள், பத்ம பூஷண் (2010), பத்ம விபூஷண் (2018), சங்கீத நாடக அகாதமி விருது (2012), 2022, ஜூலையில் ராஜ்ய சபா எம்.பி எனத் தொடரும் கௌரவங்கள் இதற்கு சாட்சி. 1,523-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள், 8,600 பாடல்கள், 20,000 கச்சேரிகள் என அந்த உழைப்பு மனிதச் சாத்தியங்களுக்கு அப்பாற்பட்டது.

காலத்தைத் தாண்டிய நாதம்!

ஐம்பது வருடங்களில் வாழ்க்கையின் ஓட்டம் அபரிமிதமான வேகமெடுத்துவிட்டது. 'அன்னக்கிளி'யில் அறிமுகமான அந்த இளைஞன், பின்னர் தென்னிந்தியத் திரை உலகை ஆட்டிப்படைக்கும் உண்மையான 'ராஜா'வாக மாறிப்போனார்.

இத்தனை ஆண்டுகளில் தொழில்நுட்பம், ரசனை எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. கான்கிரீட் காடுகள் பெருகிவிட்டன. இத்தனைக்குப் பிறகும், 1976-ல் பதிவு செய்யப்பட்ட அந்தக் கிராமத்து நாதம், 2026-லும் எந்தவொரு சிதைவுமின்றிப் புதிய தலைமுறையின் செவிகளில் ஸ்பாட்டிஃபையிலும், ஆப்பிள் மியூசிக்கிலும், பல கோடி மனங்களிலும் ஒலித்துக்கொண்டே இருக்கிறதென்றால், அதுதான் காலத்தை வென்ற ஒரு மேதையின் உன்னதப் படைப்புக்கான அசைக்க முடியாத உதாரணம்.

நிலத்தின், உழைக்கும் மக்களின் அசல் இசைக் குரல் மெட்ராஸ் ஒலிப்பதிவுக் கூடங்களுக்குள் நுழைந்து சிம்மாசனம் ஏறி 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அரை நூற்றாண்டு கடந்த பின்பும், காலமென்னும் பெருவெளியில் 'அன்னக்கிளி' இன்னும் தன் சிறகுகளை விரித்து, சுதந்திரமாகப் பறந்துகொண்டே இருக்கிறாள். அவளது பயணத்துக்கு முடிவே இல்லை. புழுதியிலிருந்து பிறந்த அந்த இசைக்கு மரணமே இல்லை.

வி

அட்டையில்: இளையராஜா /படங்கள்: கே.ராஜசேகரன்

Printed by E.Jayakumar Published by Appas Ali.M on behalf of Ananda Vikatan Publishers Private Limited and Printed at Ananda Vikatan Publishers Private Limited No. 4/452 Kalligudi, Manikandam, Madurai – Trichy NH, Tiruchirappalli - 620 012 and Published from No. 757, Anna Salai, Chennai - 600 002. Editor: T.Murugan

vikatan.com ▸20.5.26▸ANANDA VIKATAN VOLUME: 101 ISSUE:20 ▸ எல்லோரும் இன்புற்றிருக்க
₹40

ஆனந்த விகடன் 100

Since 1926

தமிழர்களின் #1 வார இதழ்



மருத்துவர்
எஸ்.சரத்குமார்
எழுதும்

ப்ரோ... கொஞ்சம் கேளுங்க!



ஜெயமோகன்
எழுதும்

மேகங்களின் குரல்



அரியணை ஏறிய மண்வாசம்!

இளையராஜா 50